



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (22.12.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசின் முத்திரைத் திட்டங்கள் (Iconic Projects) குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, சிறப்பு திட்ட செயலாக்கத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், சிறப்பு முயற்சிகள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் கே.கோபால், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (22.12.2025) தலைமைச் செயலகத்தில், தென்னிந்திய திருச்சபையின் Moderator அருட்தந்தை ரூபன் மார்க், பொதுச் செயலாளர் வழக்கறிஞர் பெர்னாண்டஸ் ரத்தின ராஜா, துணை Moderator அருட்தந்தை வி.எஸ்.பிரான்சிஸ், தூத்துக்குடி நஜரத் பிஷப் (பொறுப்பு) அருட்தந்தை ஐசக் வரபிரசாத், சி.எஸ்.ஐ. பிஷப் அருட்தந்தை ஹேமச்சந்திர குமார், வேலூர் பிஷப் அருட்தந்தை சர்மா நித்யானந்தம், மதுரை பிஷப் அருட்தந்தை ஜெயசிங் பிரின்ஸ் பிரபாகரன், சென்னை பிஷப் அருட்தந்தை பால் பிரான்சிஸ், ஈரோடு பிஷப் அருட்தந்தை ஜேக்கப் லிவிங்ஸ்டன், திருச்சி பிஷப் அருட்தந்தை ரெ.சாமுவேல் ராஜதுரை, கன்னியாகுமரி பிஷப் அருட்தந்தை கிறிஸ்டோபர் விஜயன், இயக்குநர் அருட்தந்தை கிறிஸ்டோபர் தர்மராஜ், செயலாளர் எபினேசர், ஹாமில்டன் ஆகியோர் சந்தித்தபோது, முதலமைச்சர் அவர்கள் கிறிஸ்துமஸ் வாழ்த்துகளை தெரிவித்தார். இச்சந்திப்பின்போது, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், கிறிஸ்துவ நல்லெண்ண இயக்கத்தின் தலைவர், முனைவர் இனிகோ இருதயராஜ் எம்.எல்.ஏ. ஆகியோர் உடனிருந்தனர்.

# ‘இந்தி எதிர்ப்புப் போராட்டம் - முழுமையான அரசு ஆவணங்கள்’!

## நூலினை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்!

**சென்னை, டிச. 23 -**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.12.2025) தலைமைச் செயலகத்தில், எழுத்தாளரும் தமிழ்நாடு ஆவணக்காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சி துறையின் உதவி பதிப்பாசிரியருமான திருமதி அ.வெண்ணிலா அவர்கள் தொகுத்த ‘இந்தி எதிர்ப்புப் போராட்டம் - முழுமையான அரசு ஆவணங்கள்’ என்ற நூலை வெளியிட, நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு பெற்றுக்கொண்டார். இந்நூல் தொகுப்பு, தமிழ்நாடு ஆவணக்காப்பகம் மற்றும் வரலாற்றுத் துறையின் சார்பில் வெளியாகிறது.**

இந்நூலானது, 1927ஆம் ஆண்டு சென்னை மாகாணப் பள்ளிகளில் இந்தி ஒரு பாடமாக அறிமுகப்படுத்தப்பட்ட காலம் முதல் 1967ஆம் ஆண்டு வரை தமிழ்நாட்டில் நடைபெற்ற இந்தி திணிப்புக்கு எதிரான போராட்டங்கள், இந்தியைக் கட்டாயமாக்க அன்றைய ஒன்றிய, மாநில அரசுகள் எடுத்த தொடர் முயற்சிகள், அரசின் முயற்சிகளை முறியடிக்க சுயமரியாதை இயக்கம், திராவிட முன்னேற்றக் கழகம், தமிழ்ச் சங்கங்கள், பள்ளி, கல்லூரி மாணவர்கள், தமிழார்வலர்கள் முன்னெடுத்த போராட்டங்கள், போராட்டத்தை ஒடுக்க காவல்துறை மேற்கொண்ட நடவடிக்கைகள், போராட்டங்களில் கொல்லப்பட்டோர், தீக்குளித்தோர், காயம்பட்டோர், பொது உடைமைகளுக்கு உண்டான சேதம், கொல்லப்பட்ட காவலர்கள், காவலர்கள் மீதான தாக்குதல், இந்தி எதிர்ப்புப் போராட்டம் தொடர்பான சட்டப்பேரவை, சட்ட மேலவை விவாதங்கள், அரசின் ரகசிய ஆவணங்கள், ரகசிய ஆவணங்களை அழிப்பதற்காக கொடுக்கப்பட்ட உத்தரவுகள், பொதுத் துறை, சட்டத்துறை, கல்வித்துறைகளில் இருந்து காலவாரியாக தொகுக்கப்பட்ட ஆவணங்களின் அட்டவணையே ஆகும்.

இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கேற்று சிறை சென்று, சிறையிலேயே மரணித்த நடராஜன் - தாளமுத்துவின் இறப்பு பற்றிய விவரங்கள், போராட்டத்தின் வெற்றிக்காக தீக்குளித்தோர் விவரம், பல்வேறு ஊர்களில் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட மாண வர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள், துப்பாக்கிச் சூடு, கொல்லப்பட்டவர்கள் என ஒவ்வொரு ஊரிலும் நடந்த நிகழ்வுகள் குறித்து படிக்கையில், தமிழ்நாடு தன் அடையாளத்தைத் தக்க வைப்பதற்காக நடத்திய தனித்துவப் போராட்டத்தைப் பற்றி மக்கள் அறிந்து கொள்ள முடியும்.

ஆய்வாளர்கள், பொதுமக்கள், கல்வி நிறுவனங்கள், மாணவர்களுக்குப் பயன்படும் வகையில் இந்தி எதிர்ப்புப் போராட்டம் பற்றிய ஆவணங்களுக்கான அட்டவணை நூல் வெளியிடப்பட்டுள்ளது.

இந்நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், நிதித் துறை முதன்மைச் செயலாளர் த. உதயச்சந்திரன், தமிழ்நாடு ஆவணக்காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சி துறை ஆணையர் / முதன்மைச் செயலாளர் ஹர் சஹாய் மீனா, உயர்கல்வித் துறையின் செயலாளர் முனைவர் பொ.சங்கர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### பள்ளிக்கல்வித் துறை சார்பில்

# ரூ. 210.17 கோடியில் பள்ளிக் கட்டடங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, டிச. 23 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.12.2025) தலைமைச் செயலகத்தில், பள்ளிக்கல்வித் துறை சார்பில், 20 மாவட்டங்களில், 60 அரசுப் பள்ளிகளில் 96.49 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 392 புதிய வகுப்பறைக் கட்டடங்கள், 4 ஆய்வகக் கட்டடங்கள், 16 மாணவர் / மாணவியர் கழிப்பறைக் கட்டடங்கள், 8 குடிநீர் வசதிப் பணிகள் மற்றும் கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் 113.68 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 2 மாவட்ட அரசு மாதிரிப் பள்ளிக் கட்டடங்கள் மற்றும் விடுதிக் கட்டடங்கள், பொது நூலக இயக்ககத்தின் சார்பில் 17.82 கோடி ரூபாய் செலவில் 20 மாவட்டங்களில் கட்டப்பட்டுள்ள 68 நூலகக் கட்டடங்கள் மற்றும் கடலூர், தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் 1.90 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 3 கிளை நூலகக் கட்டடங்கள் ஆகியவற்றை திறந்து வைத்தார். மேலும், மயிலாடு துறை மாவட்ட மைய நூலகத்திற்கு 4.40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்ட அடிக்கல் நாட்டினார்.**

அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் நலனிற்காக பள்ளிகளில் இணைய வசதி, அரசுப் பள்ளி மாணவர்களுக்கு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், மாணவர்களின் கற்றல் திறனை அதிகரித்து, தமிழ்நாட்டின் கல்வித் தரத்தினை உயர்த்திட “இல்லம் தேடி கல்வி”, “நம் பள்ளி நம் பெருமை”, “எண்ணும் எழுத்தும்”, “நம்ம ஸ்கூல் பவுண்டேசன்”, திறன் வகுப்பறைகள் அமைத்தல், உயர் தொழில்நுட்ப கணினி ஆய்வகம் அமைத்தல், மாதிரி பள்ளிகளை உருவாக்குதல், பள்ளி மேலாண்மைக்குழு மறுகட்டமைப்பு போன்ற சிறப்புத் திட்டங்களோடு, மாணவ - மாணவியர்களுக்கு விலையில்லா பாடநூல்கள் மற்றும் கல்வி உபகரணங்களை வழங்குதல் போன்ற பல்வேறு முன்னோடித் திட்டங்களை யும் இவ்வரசு சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

**திறந்து வைக்கப்பட்ட பள்ளிக் கட்டடங்கள் மற்றும் நூலகக் கட்டடங்களின் விவரம்:**

அந்த வகையில், செங்கல்பட்டு, கோயம்புத்தூர், கடலூர், தருமபுரி, திண்டுக்கல், கன்னியாகுமரி, கிருஷ்ணகிரி, மயிலாடுதுறை, நாகப்பட்டினம், நாமக்கல், புதுக்கோட்டை, சேலம், தஞ்சாவூர், நீலகிரி, திருவாரூர், திருச்சிராப்பள்ளி, திருப்பூர், வேலூர், விழுப்புரம் மற்றும் விருதுநகர் ஆகிய 20 மாவட்டங்களில் உள்ள 60 அரசுப் பள்ளிகளில் 96.49 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 392 புதிய வகுப்பறைக் கட்டடங்கள்,

4 ஆய்வகக் கட்டடங்கள், 16 மாணவர் / மாணவியர் கழிப்பறைக் கட்டடங்கள், 8 குடிநீர் வசதிப் பணிகள்;

கடலூர் மாவட்டம் - கடலூர் வட்டம், மஞ்சக்குப்பம் மற்றும் விழுப்புரம் மாவட்டம் - விக்கிர வாண்டி வட்டம், கெடார் கிராமம் ஆகிய இடங்களில் 113.68 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 2 மாவட்ட அரசு மாதிரிப் பள்ளிக் கட்டடங்கள் மற்றும் விடுதிக் கட்டடங்கள்;

பொது நூலக இயக்ககத்தின் சார்பில் சிறப்பு உதவித் திட்டத்தின் கீழ் 17.82 கோடி ரூபாய் செலவில் 20 மாவட்டங்களில் கட்டப்பட்டுள்ள 68 நூலகக் கட்டடங்கள் மற்றும் கடலூர் மாவட்டம் - காட்டுமன்னார்கோயில், தஞ்சாவூர் மாவட்டம் திருவிடைமருதூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டம் கீழ்வேளூர் ஆகிய இடங்களில் 1.90 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 3 கிளை நூலகக் கட்டடங்கள்; என மொத்தம் 229 கோடியே 89 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பள்ளிக் கட்டடங்கள் மற்றும் நூலகக் கட்டடங்களை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

மேலும், பொது நூலக இயக்ககத்தின் சார்பில் மயிலாடுதுறை மாவட்ட மைய நூலகத்திற்கு 4.40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்ட முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

இந்நிகழ்ச்சியில், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் மருத்துவர் பி. சந்தர மோகன், அரசு சிறப்பு செயலாளர் / பொது நூலக இயக்குநர் (மு.கூ.பொ) திருமதி. ச. ஜெயந்தி, உறுப்பினர் செயலர், தமிழ்நாடு மாதிரி பள்ளிகள், இரா.சுதன், பள்ளிக்கல்வி இயக்குநர் முனைவர் ச.கண்ணப்பன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### 100 நாள் வேலைத் திட்டத்தில் காந்தி பெயர் நீக்கம்!

# அனைத்துக் கட்சிகள் ஆர்ப்பாட்டத்தில் விவசாயிகள் - தொழிலாளர்கள் கட்சி பங்கேற்கும்!

## பொன்குமார் அறிக்கை!

*சென்னை, டிச.23-*

*100 நாள் வேலைத்திட்டத்தில் காந்தி பெயர் நீக்கம் காந்தியின் அகிம்சை, அமைதியை ஏற்றுக் கொள்ளதவர்கள் செயல் 24ஆம் நாள் நடைபெறும் அனைத்துக் கட்சி ஆர்ப்பாட்டத்தில் விவசாயிகள் - தொழிலாளர்கள் கட்சி பங்கு கொள்ளும் என பொன்குமார் அறிக்கை விடுத்துள்ளார்.*

*அவரது அறிக்கை வருமாறு:*

*முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் அவர்களால் 2005-ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதித் திட்டம், தற்போது அத்திட்டத்திலிருந்து காந்தி பெயர் நீக்கப்பட்டுள்ளது. திட்டத்திற்கு வி.பி.ஜி ராம் ஜி திட்டம் என அதாவது வளர்ந்த பாரத ஊரக வேலை வாய்ப்பு மற்றும் வாழ்வாதாரத் திட்டம் என்று பெயர் மாற்றம் செய்து, மோடி அரசு அதனை பாராளுமன்றத்தில் சட்டமாக நிறைவேற்றியுள்ளது.*

*ஏற்கனவே உள்ள மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தில் கடந்த காலத்தில் மத்திய அரசின் முழு பங்களிப்புடன் 100 நாட்கள் வேலைவாய்ப்பு உறுதிப்படுத்தப்பட்டு வந்தது. மோடி அரசு அமைந்த பின் 100 நாள் வேலை கேள்விக் குறியானது.*

*இந்த நிலையில் திட்டத்திற்குப் பெயரை மாற்றி, மாநில அரசின் மீது நிதி சுமையை ஏற்றும் வகையில் மத்திய அரசு 60 விழுக்காடும், மாநில அரசு 40 விழுக்காடும் இத்திட்டத்திற்கு செலவிடப்படும் என்ற அறிவித்திருப்பது மிகுந்த கண்டனத்திற்குரியதாகும்.*

*ஏற்கனவே ஜி.எஸ்.டி. என்கிற பெயரில் மாநிலத்தின் வரி வசூல் கொள்ளையடிக்கப்பட்டு பாரதிய ஜனதா கட்சி ஆட்சியில் இருக்கும்*



*மாநிலங்களுக்கு வாரி வழங்கப்படுகிறது. வரி கொடுத்த மாநிலங்களுக்கு மிக மிக சொற்ப அளவில் அந்த ஜி.எஸ்.டி.யின் பங்கு ஒதுக்கப்படுகிறது.*

*குறிப்பாக தமிழ்நாடு போன்ற பாரதிய ஜனதா கட்சியின் மக்கள் விரோத நடவடிக்கையை கடுமையாக எதிர்த்து போராடுகிற மாநிலங்களுக்கு தரவேண்டிய எல்லா வகையான நிதியும் நிறுத்தப்பட்டுள்ளது. அதனை பெறுவதற்கு தொடர்ந்து மாநில அரசு போராடிக் கொண்டிருக்கிறது இந்த நிலையில் மாநில அரசினுடைய பங்களிப்பாக 40 விழுக்காடு என்பது இந்தத் திட்டத்தை சிதைக்கும் செயலாகும்.*

*100 நாட்கள் வேலை என்பதற்கு பதில் இனி 125 நாட்கள் வேலை என கசப்பின் மீது இனிப்பு பூச்சு போன்ற கவர்ச்சியான ஒரு அறிவிப்பை அதில் வெளியிட்டுள்ளார்கள். 100 நாட்கள் வேலை உறுதி சட்டத்தின் அடிப்படையில் இதுவரை எத்தனை மாநிலங்களுக்கு 100 நாட்களுக்கு முழுமையாக ஒன்றிய மோடி அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது எனக் கூற முடியுமா? 100 நாள் திட்டத்திற்கே முழுமையாக நிதி ஒதுக்காத ஒன்றிய அரசு, 125 நாள் என்று அறிவித்திருப்பது ஒரு மோசடி அறிவிப்பாகும்.*

*மேலும் பயனாளிகள் ஒன்றிய அரசு கூறியுள்ள படி பன்முக வறுமை குறிக்காட்டுகள் அடிப்படையில் தேர்வு செய்யப்பட வேண்டும் என்று கூறியிருப்பது இந்தத் திட்டத்தை குழிதோண்டி புதைப்பதற்கான அறிவிப்பாகும்.*

*மன்மோகன் சட்டத்தில் வேலை பெறுவது மக்களின் அடிப்படை உரிமை என்று இருந்தது. இப்போது அப்படி இல்லை. வேலை இருந்தால் தரப்படும் என்று மாறறப்பட்டுள்ளது. மகாத்மா காந்தி திட்டத்தில் வேலை ஒருவர் கேட்டால் 15 நாட்களுக்குள் வேலை தர வேண்டும் என்ற கட்டாயம் இருந்தது. இப்போது அப்படி இல்லை. வேலை தர முடியாத நிலையில் இழப்பீடு வழங்க வேண்டும் என மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.*

*கிராமப்புறத்தில் விவசாயத் தொழில் அடியோடு பொய்த்து விட்ட காரணத்தினால் தான் அவர்களுக்கு 100 நாள் வேலைத் திட்டத்தின் மூலம் வாழ்வாதாரம் உறுதிப்படுத்தப்பட்டு வந்தது. தற்போது விவசாயத் தொழில் நடைபெறும் 60 நாட்களுக்கு வேலை இல்லை என்றால் கிராமப்புற ஏழை, எளிய மக்களின் நிலை என்னவாகும்?. விவசாயத் தொழிலோடு இணைத்து இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தியிருந்தால் கூட ஆறுதலாக இருந்திருக்கும். வளர்ந்த பாரத ஊரக வேலை வாய்ப்பு திட்டமாம். பாரதம் வளர்ந்து விட்டது என்றால் எதற்கு இந்தத் திட்டம்?*

*இத்திட்டத்தன் கீழ் எந்த வகையான வேலைகளை செய்யலாம் என்பதை சம்பந்தப்பட்ட ஊராட்சி மன்றங்களும் மாநில அரசும் தீர்மானிக்கும். இனி அப்படி செய்ய முடியாது. மத்திய அரசு நிர்ணயிக்கும் பணிகளை மட்டுமே இத்திட்டத்தின் கீழ் செய்ய முடியும்.*

*மகாத்மா காந்தி 100 நாள் வேலை திட்டத்தில் மாநில அரசு எத்தனைத் தொழிலாளர்களை வேண்டுமானாலும் சேர்த்துக் கொண்டு, எவ்வளவு மதிப்பீட்டிலும் திட்டத்தை தயார் செய்தாலும் அதற்கு மத்திய அரசு ஒப்புதல் கொடுத்து, அதற்கான நிதி ஒதுக்கும். இனி ஒன்றிய அரசுதான் இதனை நிர்மாணிக்கும் இவையெல்லாம் இத்திட்டத்திற்கான கேடுகளாகும்.*

*காந்தியின் மீது அவர்களுக்கு அப்படி என்ன கோபம்? என்று கேட்டால் காந்தி என்கிற பெயர் மீது அவர்களுக்கு கோபம் இல்லை. காந்தி தாங்கி நிற்கிற அகிம்சை, அமைதி மீது தான் அவர்களுக்கு தீராத கோபம் இருக்கிறது. ஏனென்றால் ஆர்.எஸ்.எஸ், சங்பரிவார் அமைப்புகள் அகிம்சையையோ, அமைதியையோ ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். ஜாதி, மத, இன, கலவரத்தின் மூலம் அரசியல் ஆதாயம் அடைவதையே அடிப்படையாகக் கொண்டவர்கள். எனவே தான் காந்தியின் பெயரை நீக்கி உள்ளார்கள். காந்தி பெயர் உலகளாவிய புகழ்பெற்றதாகும். அதை ஒருகாலும் மோடி அரசால் மறைத்து விட முடியாது. மக்கள் தக்க பாடத்தை புகட்ட காத்துக் கொண்டிருக்கிறார்கள்.*

*எனவே மோடி அரசு இத்திட்டத்தை திரும்ப பெற்றிட வேண்டும். வருகிற 24ஆம் தேதி இப்புதிய திட்டத்தை எதிர்த்து திமுக தலைமையிலான தோழமைக் கட்சிகள் நடத்த உள்ள நாடு தழுவிய ஆர்ப்பாட்டத்தில் விவசாயிகள் தொழிலாளர் கட்சி முழுமையாக பங்கு கொள்ளும். தென் சென்னையில் நடைபெறும் ஆர்பாட்டத்தில் நான் (பொன்குமார்) கலந்து கொள்கிறேன்.*

*இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.*

காணொலி காட்சி வாயிலாக சென்னை வடக்கு, வடகிழக்கு, கிழக்கு, மேற்கு, தென்மேற்கு, தெற்கு - காஞ்சிபுரம் வடக்கு - திருவள்ளூர் கிழக்கு, மத்திய, மேற்கு ஆகிய மாவட்டங்களுக்குட்பட்ட

# சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள் கூட்டம்!

## துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா எம்.பி. அறிவிப்பு!




சென்னை வடக்கு, வடகிழக்கு, கிழக்கு, மேற்கு, தென்மேற்கு, தெற்கு - காஞ்சிபுரம் வடக்கு - திருவள்ளூர் கிழக்கு, மத்திய, மேற்கு ஆகிய மாவட்டங்களுக்குட்பட்ட சட்டமன்ற தொகுதி பார்வையா ளர்கள் கூட்டம் நாளை (24.12.2025-புதன் கிழமை), மாலை 6.00 மணியளவில் காணொலி காட்சி வாயிலாக நடைபெறும்.

அதுபோது இம்மாவட்டங்களுக்குட்பட்ட சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள் அனைவரும் தவறாது இக்கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: கழக தலைவர் அவர்கள் தலைமையில் 21.12.2025 அன்று நடைபெற்ற காணொலி காட்சி கூட்டத்தில் வழங்கப்பட்ட அறிவுறுத்தலின்படி (SIR) மீதான பணிகளை நிறைவு செய்வது சம்பந்தமாக!

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை 18.
நாள் :24,12.2025.

**ஆ.இராசா எம்.பி.**
துணைப் பொதுச் செயலாளர்
தி.மு.க.



அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (22.12.2025) சென்னை, தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழக வளாகத்தில், ரூ.12 கோடி செலவில் புனரமைக்கப்பட்ட கட்டடங்கள், வளாகம் மற்றும் புதிய நுழைவு வாயில் ஆகியவற்றினை திறந்து வைத்தார். இவ்விழாவில் பல்கலைக்கழக துணை வேந்தர் மரு.நாராயணசாமி. அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார். தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் மரு.அருண்தம்புராஜ், தமிழ்நாடு சுகாதார அமைப்பு திட்ட இயக்குநர் மரு. வினீத், பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.சோமசுந்தரம், மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு. சுகந்தி இராஜகுமாரி, மருத்துவம் மற்றும் ஊரகநலப்பணிகள் இயக்குநர் மரு.சித்ரா, பதிவாளர் மரு.சிவசங்கீதா மற்றும் அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.




செங்கல்பட்டு மாவட்டம், திருக்கழுக்குன்றம் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் 8 வகுப்பறைகள் கொண்ட கட்டிடங்களை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை தலைமை செயலகத்திலிருந்து காணொலி காட்சி வாயிலாக திறந்து வைத்தார்கள். அதனை தொடர்ந்து, திருக்கழுக்குன்றம் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் துவக்கி வைத்தார். இதில், மாவட்ட ஆட்சித்தலைவர் தி.சினேகா, நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எஸ்.பாலாஜி, வடக்கு ஒன்றியச் செயலாளர் வீ.தமிழ்மணி, பேரூராட்சி தலைவர் ஜி.டி.யுவராஜ் மற்றும் தலைமையாசிரியர், ஆசிரியர்கள், மாணவிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.